# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.14 of 2020
Prosecution Witness No.P.W.7 (L.W.15)

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.Nagendirakumar | Caste | : -- |
| Father's Name | : M.Arujunan | Calling: | Associate Professor |
| Village | : Park Town | Religion | : -- |
| Taluk | : Chennai | Age | : 39 yrs. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.01.2025.

(Accused 1 and 2 present)

எதிரிகள் தரப்பில் எந்த ஒரு வழக்கறிஞரும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. விசாரணைக்கு அழைக்கப்பட்ட சாட்சிகள் இன்று ஆஜரான நிலையில் எதிரிகளிடம் சாட்சிகளை விசாரிக்க இந்நீதிமன்றம் தயாராக உள்ளது என்று சொன்ன நிலையில், 1ம் எதிரி அவருடைய வழக்கறிஞருக்கு உடம்பு சரியில்லை என்றும், அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார் என்று சொன்னார். 2ம் எதிரி அவருடைய வழக்கறிஞர் இன்று நீதிமன்ற விசாரணைக்கு வர இயலவில்லை என்றும், அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது வழக்கறிஞர் தொலைபேசியை எடுத்து பேசவில்லை என்றும் சொன்னார். அரசு அலுவலர்கள் சாட்சியாக ஆஜரான நிலையில் சாட்சியிடம் கீழ்க்கண்டவாறு விசாரணை பதியப்படுகிறது. எதிரிகளை சாட்சிக்கு அருகில் நிறுத்தி சாட்சிசொல்வதை எதிரிகள் கேட்கும்படி சொல்லப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது சென்னை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ உயர்நிலை துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.01.2019ம் அன்று நான் வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது, குடியாத்தம் நகர கா.நி. காவல் ஆய்வாளர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின்படி குடியாத்தம் நகர கா.நி. கு.எண். 24/2019 வழக்கின் இறந்து போன திரு.உதயசூரியன் வயது 23, ஆண், என்பவரது பிரேதத்தை முதல் நிலை காவலர் 3183 திரு.சிவஞானம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டு, அதே நாளில் பிரேத கூராய்வு செய்தேன். பிரேத பரிசோதனை செய்யவேண்டி கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.8 ஆகும். மேற்படி அதே நாளில் பிற்பகல் 4.15 மணியளவில் பிரேத கூராய்வு செய்தேன். கூராய்வின்போது, மரண விரைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. அவரது கை விரல் நகங்கள் வெளிறி இருந்தன. அவரது உடலில் காணப்பட்ட இறப்பிற்கு முன் உண்டான காயங்கள் பின்வருமாறு.

காயம் 1. செம்பழுப்பு நிற சிராய்ப்பு காயங்கள

(அ) 2.5 x 1.8 cm அளவில் இடது தோள்பட்டையில் காண்பட்டது.

(ஆ) 4 வளைந்து நீண்ட விசிறி போன்று அமைந்த அழுந்திய சிராய்ப்பு காயம் 6.5 -9.5 cm. X 0.5 – 0.8 cm அளவுகளில் இடதுபுஜத்தின்

மேல்வெளிப்புறத்தில் காணப்பட்டது. அவற்றில் பெரிய சிராய்ப்பு காயத்தின் பின்முனையில் இருந்து, 2.1x 0.8. x 0.8 cm அளவிலான மேலோட்டமான வெட்டு காயம் நீண்டு காணப்பட்டது.

(இ) வளைந்து நீண்ட அழுந்திய சிராய்ப்பு காயம் 11.5 x 0.5 cm அளவில் மேல் முதுகில் காணப்பட்டது. அதன் கீழநுனியில் இருந்து 1.9 x 1.1 x 1.2 cm அளவிலான மேலோட்டமான வெட்டு காயம் நீண்டு காணப்பட்டது.

(ஈ) வளைந்து நீண்ட அழுந்திய சிராய்ப்பு காயம் 13.5 x 0.5 cm அளவில் நடுமுதுகில் காணப்பட்டது.

(உ) வளைந்து நீண்ட அழுந்திய சிராய்ப்பு காயம் 10.5 x 0.5 cm அளவில் இடது முதுகில் கீழ்பகுதியில் காணப்பட்டது. அதன் கீழ்நுனியில் கத்திகுத்து காயம் போன்ற அமைப்புடன் 2.5 x 1.2 x 2.8 cm அளவில் காணப்பட்டது.

(ஊ) 3.8 x 0.8 cm அளவில் இடது உள்ளங்கையில் காணப்படடது.

(எ) 2.5 x 1.5 cm அளவில் வயிற்றின் இடதுபுறம் காணப்பட்டது.

(ஏ) 3.5 x 0.8 cm அளவில் இடது முழங்காலில் காணப்பட்டது.

(ஐ) 1.2 x 1.5 cm அளவில் இடது கால் முட்டியில் காணப்பட்டது.

காயம் 2. கருஞ்சிவப்பு நிற பரவிய கன்றிய காயம் மேல்உதட்டில் வலது பாதியில் காணப்பட்டது.

3, கிடைமட்டமான சாய்ந்த வெட்டுக்காயங்கள்

(அ) 7.5 x 1.2 cm x எலும்பு ஆழத்துடன் தலையின் இடது பகுதியில் காணப்பட்டது. அதன் அடியில் இருந்த கபாலத்தின் இடது பெரைட்டல்

எலும்பில் மேலோட்டமான வெட்டு முறிவு காணப்பட்டது. கபாலத்தை பிளந்து பார்த்தபோது, மெல்லிய கருஞ்சிவப்பு நிற பரவிய சப் அரக்னாய்வு இரத்தக்கசிவு மூளையின் மேற்பரப்பு முழுவதும் காணப்பட்டது. வலது பெருமூளையின் வெளிப்பகுதி கன்றி காணப்பட்டது (contre-coupe injury). மூளை வீங்கியும் வெளிறியும் காணப்பட்டது.

(ஆ) 6.8 x 3.1 cm x எலும்பு ஆழத்துடன் இடது முழங்கையில் காணப்பட்டது. அதன் அடியில் இருந்த இடது அல்னா எலும்பில் மேலோட்டமான வெட்டு முறிவு காணப்பட்டது.

(இ) 10.5 x 4.8 cm x எலும்பு ஆழத்துடன் இடது புஜத்தின் பின்பகுதியில் காணப்பட்டது. அதன்அடியில் இருந்த இடதுபுஜ எலும்பில் முழுமையான வெட்டு முறிவு காணப்பட்டது. அதனை சுற்றியிருந்த மென்திசுக்கள் கன்றியும் இரத்தம் வெளிப்பட்டும் காணப்பட்டது.

(ஈ) 7.2 x 3.5 x 4.5 cm அளவிலான வெட்டுக் காயம் இடது தொடையில் வெளிப்பகுதியில் காணப்பட்டது. மேற்கூறிய அனைத்து காயங்களின் ஓரங்களும், சீராக வெட்டப்பட்டு, கன்றியும் காணப்பட்டன.

காயம் 4 – நான்கு கிடைமட்டமான சாய்ந்த வளைந்து நீண்ட வெட்டுக் காயங்கள் ஒருங்கிணைந்து, ஒரு பெரிய சீரற்ற அகண்ட வெட்டு காயமாக கீழ் தாடையின் இடதுபுறம், முகத்தின் இடதுபுறம், இடது காதுமடல், கழுத்தின் இடதுபுறம், கபாலத்தின் இடதுஅடிப்பகுதி ஆகியவற்றை துளைத்து 2ம் கழுத்து எலும்பின் இடதுபுறம் வரை சென்று இருந்தது. இந்த சீரற்ற பெரிய காயத்தின் ஓரங்கள் சீராக

வெட்டப்பட்டும், கன்றியும் சில முக்கோண வடிவிலான தோல் நீழ்ச்சிகளுடன் காணப்பட்டது. அதை தொடர்ந்து கூராய்வு செய்ததில், இந்த வெட்டுக்காயங்களின் அடியில் இருந்த முகம் மற்றும் கழுத்தின் தசைகள், நரம்புகள், இடதுபுற கழுத்தில் காணப்படும் பெரிய இரத்த நாளங்கள், எச்சில் சுரப்பிகள் மற்றும் இதர மென்திசுக்கள் ஆகியன வெட்டப்பட்டு காணப்பட்டது. கீழ்தாடையின் இடது பாதியில் சீரற்ற முழுமையான வெட்டு முறிவு காணப்பட்டது. கபாலத்தின் இடது அடிபகுதியில் முழுதடிமன் ஆழத்துடனான சீரற்ற முழுமையான சீவல் முறிவு காணப்பட்டது. அதன் வழியாக அதன் அடியில் இருந்த மூளையானது வெளிப்பட்டு காணப்பட்டது. 2ம் கழுத்து எலும்பின் இடது பாதியில் முழுமையற்ற சீரற்ற வெட்டு முறிவு காணப்பட்டது. அதன் அடியில் இருந்த தண்டுவடத்தில் முழுமையற்ற வெட்டு காணப்பட்டது. மேற்கூறிய காயங்களை சுற்றியிருந்த மென்திசு்ககள கன்றியும் இரத்தம் வெளிப்பட்டும், முகம் சிதைந்தும் காணப்பட்டது.

விலா எலும்புகள் இயல்பாக இருந்தன. இருதயம் இயல்பான அளவிலும் அதன் அனைத்து அறைகளும் காலியாகவும் காணப்பட்டன. அதன் வால்வுகள் மற்றும் இரத்த நாளங்கள் இயல்பாக இருந்தன. நுரையீரல்கள் இயல்பான அளவிலும் வெளிறியும் காணப்பட்டது. குரல்வளை மற்றும் முச்சுகுழாய் காலியாகவும், அதன் சலிப்படலம் வெளிறியும் காணப்பட்டது. நாவடி எலும்பு இயல்பாக இருந்தது. இரைப்பையில் சுமார் 350 மில்லி பழுப்பு நிற தடித்த திரவம் பாதி செரித்த உணவு பொருட்களுடன் கலந்து, எவ்வித குறிப்பிடத்தக்க வாடையும் இன்றி காணப்பட்டது. அதன் சலிப்படலம்

வெளிறி இருந்தது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பான அளவிலும் வெளிறியும் காணப்பட்டன. குடல்களில் மலப்பொருட்கள் காணப்பட்டன. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. இடுப்பு எலும்பு இயல்பாக இருந்தது. அவரது உடல் உள்ளுருப்புகளை இரசாயன பரிசோதனைக்காக சேகரித்து அனுப்பப்பட்டு அறிக்கை பெறப்பட்டது. அதில் அவரது உடல் உள்ளுருப்புகளில் எத்தில் ஆல்கஉறால் கண்டறியப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இதனால் மேற்படி இறந்த நபர் பலதரப்பட்ட வெட்டுகாயங்களால் உண்டான அதிகப்படியான இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியினால் இறந்து இருக்கக்கூடும் என்றும், அவரது உடல் உள்ளுருப்புகளின் இரசாயன பரிசோதனையில் எத்தில் ஆல்கஉறால் கண்டறியப்பட்டது என்றும், இறுதி கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். நான் வழங்கிய சடலக் கூராய்வு அறிக்கை மற்றும் இறுதி கருத்துரை அ.சா.ஆ.9. விசரா அறிக்கை அ.சா.ஆ.10.

இறந்த நபரின் காயங்கள் சா.பொ.4 கத்தியால் வெட்டியிருப்பின் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் இறந்த நபரின் காயங்கள் 2 நபர்களால் பல்வேறு கோணங்களில் வெட்டியிருக்க வாய்ப்புள்ளது. அதே கத்தியை பயன்படுத்தி வெட்டும்போது, அதனுடைய முனையின் மூலம் வெட்டும்போது காயம் 1ல் கண்ட காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. காயம் 1ல் குறிப்பிட்டது போல கத்தி குத்துகாயம் போன்ற அமைப்பில் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய தெரியாது என்றதால், குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

PERUMALSAMY MURUGAN
Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.06 18:26:01 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.14 of 2020
Prosecution Witness No.P.W.8 (L.W.16)

| | | | |
|---|---|---|---|
| Name | : Thiru.Ashokkumar | Caste | : SC |
| Father's Name | : இராஜி | Calling: | துணை இயக்குநர் (ஓய்வு) |
| Village | : வேலூர் | Religion | : இந்து |
| Taluk | : வேலூர் | Age | : 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.01.2025.

(Accused 1 and 2 present)

எதிரிகள் தரப்பில் எந்த ஒரு வழக்கறிஞரும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. விசாரணைக்கு அழைக்கப்பட்ட சாட்சிகள் இன்று ஆஜரான நிலையில் எதிரிகளிடம் சாட்சிகளை விசாரிக்க இந்நீதிமன்றம் தயாராக உள்ளது என்று சொன்ன நிலையில், 1ம் எதிரி அவருடைய வழக்கறிஞருக்கு உடம்பு சரியில்லை என்றும், அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார் என்று சொன்னார். 2ம் எதிரி அவருடைய வழக்கறிஞர் இன்று நீதிமன்ற விசாரணைக்கு வர இயலவில்லை என்றும், அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது வழக்கறிஞர் தொலைபேசியை எடுத்து பேசவில்லை என்றும் சொன்னார். அரசு அலுவலர்கள் சாட்சியாக ஆஜரான நிலையில் சாட்சியிடம் கீழ்க்கண்டவாறு விசாரணை பதியப்படுகிறது. எதிரிகளை சாட்சிக்கு அருகில் நிறுத்தி சாட்சிசொல்வதை எதிரிகள் கேட்கும்படி சொல்லப்பட்டது.

முதல் விசாரணை

நான் வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றேன். கடந்த 18.1.2019 அன்று குடியாத்தம் நகர கா.நி. கு.எண்.24/2019 வழக்கில் இறந்து போன உதயசூரியன் வயது 23 என்பவரது உடல் உள்ளுருப்புகள் பேராசிரியர் சட்டம் சார்ந்த மருத்துவம் வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அவர்களிடம் இருந்து பெறப்பட்டு, 31.1.2019 அன்று ஆய்வு செய்யப்பட்டது.

உடல் உள்ளுருப்புகளான இரைப்பையில் 732 மில்லி கிராம் எத்தில் ஆல்கஉறால் சிறுகுடலில் 478 மில்லி கிராம் எத்தில் ஆல்கஉறால், கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தில் 377 மில்லி கிராம் எத்தில் ஆல்கஉறால், மூளையில் 307 மில்லி கிராம் எத்தில் ஆல்கஉறால், இரத்தத்தில் 222 மில்லி கிராம் எத்தில் ஆல்கஉறால் இருப்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது. அவற்றில் வேறு நச்சு பொருட்கள் ஏதும் கண்டறியப்படவில்லை.

உப்புநீரில் ஆல்கஉறால் மற்றும் வேறு நச்சு பொருட்கள் கண்டறியப்படவில்லை. இது நான் வழங்கிய நஞ்சியியல் பகுப்பாய்வு அறிக்கை ஆகும்.

மேற்படி வழக்கில் பிரேத பரிசோதனையின்போது, சேகரிக்கப்பட்ட மாதிரி இரத்தம் 18.1.2019 அன்று ஆய்வகத்தில் பெறப்பட்டு, குருதி வடிநீரியியல் ஆய்வுக்காக தடய அறிவியல் துறை, சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது சம்மந்தப்பட்ட வட்டார தடய அறிவியல் துறைக்கு அனுப்பப்பட்ட அறிக்கை அ.சா.ஆ.11

சென்னை குருதி வடிநீரியியல் பிரிவில் இருந்து பெறப்பட்ட ஆய்வறிக்கையை திரு.சீனிவாசன், துணை இயக்குநர் மற்றும் விஜயலட்சுமி, அறிவியல் அலுவலர் ஆகியோரால் தயாரிக்கப்பட்ட ஆய்வு அறிக்கையில் மேற்படி இரத்தத்தில் தொகுதியை அறுதியிட்டு கூற இயலவில்லை என ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டது. அந்த அறிக்கை அ.சா.ஆ.12.

மேலும், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மாதிரி பொருட்கள் நீதித்துறை நடுவர், குடியாத்தம் அவர்களிடம் இருந்து 20.3.2019 அன்று ஆய்வகத்தில் பெறப்பட்டு, 09.4.2019 அன்று ஆய்வு செய்யப்பட்டது.

பொருள் எண்.1 – அடற்பழுப்பு கறையுடன் கூடிய மண் மற்றும் சிறுகற்கள்.

பொருள் எண்.2 – மண் மற்றும் சிறுகற்கள்.

பொருள் எண்.3 – அடற்பழுப்பு கறையுடன் கூடிய 48 செ.மீ. நீளமுள்ள மூங்கில் கைப்பிடியுடன் கூடிய துருஏறிய வெட்டுக்த்தி. (சா.பொ.4)

பொருள் எண்.4 – அடற்பழுப்பு கறையுடன் கூடிய மெருன் நிற முழுக்கை சட்டை.

பொருள் எண்.5 – அடற்பழுப்பு கறையுடன் கூடிய நீலநிற ஜீன்ஸ் டவுசர்.

பொருள் எண்.6 – அடற்பழுப்பு கறையுடன் கூடிய சந்தன நிற முழுக்கை சட்டை.

பொருள் எண்.7 – கிழிந்த அடற்பச்சை டீ சர்ட்.

மேற்கூறிய பொருட்களில் 1, 3 முதல் 6 ஆகியவற்றில் இரத்தக்கறை இருப்பது கண்டறியப்பட்டது. பொருள் எண்.2 மற்றும்

7ல் இரத்தக்கறை கண்டறியப்படவில்லை. அந்த உயிரியியல் ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.13.

இரத்தக்கறை படிந்த பொருட்களை குருதி வடிநீரியியல் ஆய்வுக்காக தடய அறிவியல் துறை சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. குருதி வடிநீரியியல் பிரிவில் இருந்து பெறப்பட்ட ஆய்வறிக்கையை திரு.சீனிவாசன், துணை இயக்குநர் மற்றும் ஸ்மிருதி பேனர்ஜி, அறிவியல் அலுவலர் ஆகியோரால் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கையில் பொருள் எண்.1, 3 முதல் 6 வரை உள்ள பொருட்களின் மூலம் மனித இனத்தை சார்ந்தது என்றும், அவற்றின் தொகுதிகளை அறுதியிட்டு கூற இயலவில்லை என அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கை அ.சா.ஆ.14.

இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய தெரியாது என்றதால், குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.06 18:26:17 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.14 of 2020
Prosecution Witness No.P.W.9 (L.W.17)

| | | | |
|---|---|---|---|
| Name | : Thiru.Iruthayaraj | Caste | : இந்து |
| Father's Name | : தங்கராஜ் | Calling | : |
| Village | : சத்துவாச்சாரி | Religion | : கிறிஸ்டியன் |
| Taluk | : வேலூர் | Age | : 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.01.2025.

(Accused 1 and 2 present)

எதிரிகள் தரப்பில் எந்த ஒரு வழக்கறிஞரும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. விசாரணைக்கு அழைக்கப்பட்ட சாட்சிகள் இன்று ஆஜரான நிலையில் எதிரிகளிடம் சாட்சிகளை விசாரிக்க இந்நீதிமன்றம் தயாராக உள்ளது என்று சொன்ன நிலையில், 1ம் எதிரி அவருடைய வழக்கறிஞருக்கு உடம்பு சரியில்லை என்றும், அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார் என்று சொன்னார். 2ம் எதிரி அவருடைய வழக்கறிஞர் இன்று நீதிமன்ற விசாரணைக்கு வர இயலவில்லை என்றும், அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது வழக்கறிஞர் தொலைபேசியை எடுத்து பேசவில்லை என்றும் சொன்னார். அரசு அலுவலர்கள் சாட்சியாக ஆஜரான நிலையில் சாட்சியிடம் கீழ்க்கண்டவாறு விசாரணை பதியப்படுகிறது. எதிரிகளை சாட்சிக்கு அருகில் நிறுத்தி சாட்சிசொல்வதை எதிரிகள் கேட்கும்படி சொல்லப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது தாம்பரம் மாநகரம் மத்திய குற்றப்பிரிவில் உதவி ஆணையாளராக பணிபுரிகிறேன். நான் ஏற்கனவே 8.1.2019 அன்று குடியாத்தம் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி பொறுப்பில் இருந்தபோது, சுமன், த/பெ.மாசிலாமணி, ஆர்.எஸ். நகர், குடியாத்தம் என்பவர் நிலையம் ஆஜராகி 8.1.2019 ம் தேதி இரவு 8 மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்து எழுத்துமூலமான புகார் அளித்தார். பிறகு காவல் நிலையத்தில் அன்றே கு.எண்.24/2019 சட்டப்பிரிவுகள் 294(பி), 506(2), 302 இ.த.ச. பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.15 பதிவு செய்தேன். பிறகு முதல் தகவல் அறிக்கை மற்றும் அதன் நகல்களை சம்மந்தப்பட்ட நீதிமன்றம் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு காவலர் மூலம் அனுப்பிக் கொண்டேன்.

பின்னர் இந்த வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, சம்பவ இடத்திற்கு இரவு 8.45 மணிக்கு குடியாத்தம் நகர கா.நி. எல்லைக்குட்பட்ட ராசி நகர் மற்றும் சக்திநகர் சந்திப்பில் சாட்சிகள் முரளி மற்றும் அசோக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகசர் தயார் செய்தேன். பின்னர் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.16 தயார் செய்தேன்.

அதன் தொடர்ச்சியாக சம்பவ இடத்தில் இரத்தம் படிந்த மண் சிறிதளவு, இரத்தம் படியாத சாதாரண மண் சிறிதளவு மற்றும் பட்டியல் சாட்சி 1 அவர்களின் லீவிஸ் டீ சர்ட் பச்சை நிற கிழிந்த நிலையில் இருந்ததையும், ஒரு ஜோடி ரப்பர் செருப்பு (Aditi) மற்றும் இறந்து போன

நபர் பயன்படுத்திய இருசக்கர வாகனமான TVS XL Super பச்சை நிறம் பதிவு எண்.TN-23-AU-5551 ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன்.

பிறகு வழக்கு சொத்துக்களை படிவம் 91 அ.சா.ஆ.17 மூலம் நீதிமன்றத்திற்கு காவலர் மூலம் அனுப்பிக் கொண்டேன். ஏற்கனவே காயம்பட்ட நபரை அங்கிருந்த பொது ஜனங்கள் மருத்துவமனைக்கு அனுப்பியபோது மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்று முடிவு செய்து, அந்த சடலத்தை பிண அறையில் வைத்திருந்தார்கள். எனவே சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகளான சுமன், தேவி, மகேந்திரன், ஸ்ரீகாந்த், மோனிஷ்குமார், மணி (எ) மணிகண்டன, முரளி மற்றும் அசோக்குமார் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன்.

மறுநாள் காலை 9 மணிக்கு வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்து போன சூரியா (எ) உதயசூரியன் த/பெ.உலகநாதன் என்பவரின் பிரேதத்தின்மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.18 தயார் செய்தேன். அதில் பஞ்சாயத்தாரிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன்.

பிறகு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி, பிரேதத்தை முதல் நிலை காவலர் சிவஞானம் அவர்களிடம் வேண்டுகோள் கடிதத்துடன் சடல கூராய்வுக்காக ஒப்படைத்தேன். பிறகு பிரேத பரிசோதனை செய்து, பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட

உடல் உறுப்புகளை காவலர் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி, பின்னர் நீதிமன்றத்தின் மூலம் தடய அறிவியல் துறைக்கு அனுப்பிக் கொண்டேன்.

இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட ஆஜர் எதிரிகளை செதுக்கரை மலையடிவாரம் வழியாக தேடிச் செல்லும்போது 10.1.2019 அன்று காலை 6 மணிக்கு செதுக்கரை மலையடிவாரம் ஆஜர் எதிரிகளை, சாட்சிகள் ராஜேஷ் மற்றும் அதியமான் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து, எதிரிகளை விசாரணை செய்தபோது, ஆஜர் எதிரிகள் தம்மிச்சையாக எவ்வித துன்புறுத்தலும் இல்லாமல் வழக்கு சம்பவம் குறித்து வாக்குமுலம் கொடுத்தார்கள். அதில் ஆஜர் முதல் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, அதில் மேற்கண்ட சாட்சிகளிடமும், ஆஜர் முதல் எதிரியிடமும் கையொப்பம் பெற்றேன். முதல் எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில், அவர் பயன்படுத்திய TVS Scooty Zest TN-23-CW-4766 வாகன சீட்டிற்கு அடியில் இருந்த டிக்கியில் இருந்து இரத்தம் படிந்த வெட்டுக் கத்தி சுமார் 43 3/4 அடி நீளமுள்ளதை ஆஜர் முதல் எதிரி எடுத்து ஆஜர் செய்தததை, மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலமும், ஆஜர் முதல் எதிரி உடுத்தியிருந்த சட்டை மற்றும் பேண்ட் இரத்தம் படிந்திருந்ததை மாற்று உடை கொடுத்து மேற்கண்ட வழக்கு சொத்துக்களை கைப்பற்ற மகசரில் கைப்பற்றி ஆஜர் எதிரியிடமும், சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்றேன்.

அதன் தொடர்ச்சியாக ஆஜர் 2ம் எதிரியை விசாரணை செய்ய எந்தவித துன்புறுத்தலும் இன்றி தம்மிச்சையாக ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தை பதிவு செய்து, மேற்கண்ட சாட்சிகளிடமும், ஆஜர் 2ம் எதிரியிடமும் கையொப்பம் பெற்றேன். 2ம் எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் TVS Scooty Zest TN-23-CW-4766 என்ற வாகனத்தையும், 2ம் எதிரி அணிந்திருந்த இரத்தக்கறை படிந்த சந்தன கலர் முழுக்கை சட்டையையும் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி மேற்படி சாட்சிகள் மற்றும் 2ம் எதிரியிடம் கையொப்பம் பெற்றேன்.

பிறகு வழக்கு சொத்துக்களுடனும், ஆஜர் எதிரியுடனும் நிலையம் சேர்ந்து திரேக விசாரணைக்கு பின்பு எதிரிகளை காவலர் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக் கொண்டேன். படிவம் 91 (இரண்டு படிவங்கள்) அ.சா.ஆ.19 மற்றும் அ.சா.ஆ.20.

மேலும் இந்த வழக்கில் சாட்சிகள் ராஜேஷ், அதியமான், சௌந்தர், குணசேகரன், தாமோதரன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இந்த வழக்கில் பிரேத கூராய்வு செய்த மருத்துவரிடம் (அ.சா.7) மருத்துவ அறிக்கை பெற்றுக் கொண்டு, அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இந்த வழக்கில் தலைமை காவலர் சிவஞானம், அ.சா.8 அசோக்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு வழக்கின் விசாரணையை முடித்து, டிடிபி அவர்களின்

கருத்துரை பெற்று, ஆஜர் எதிரி மீது சட்டப்பிரிவு 294(பி), 506(2), 302 இ.த.ச.படி இறுதி அறிக்கையை சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய தெரியாது என்றதால், குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.06 18:26:26 +0530